[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) வணிக வரிகள் துறை அறிவிக்கையின் பொருள்களில் ஆங்கிலம் தமிழ் வாசக வேறுபாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விழுப்புரம்...

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், சொல்லுங்கள்.

முற்பகல் 11-00

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்ட ஏடுகள் குறித்து ஒரு சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். இன்றையதினம் Papers Placed on the Table of the House வணிக வரிகள் துறை அறிவிக்கை-1, அரசாணை (நிலை) எண் 16 என்று போட்டு, அதற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

மேற்சொன்ன அறிவிக்கையில், தற்போதுள்ள வரம்பு நிபந்தனைக்குப் பிறகு, பின்வரும் வரம்பு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, "அன்றியும் வணிக வரிகள் துறையின் 23-1-2000 ஆம் நாளிட்ட 12ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள குழாய் இணைப்புத் தொடர் தொழில்களுக்கு மேற்சொன்ன வரம்பு நிபந்தனை பொருந்தாது"

இது ஓர் இடத்தில் அல்ல. மூன்று இடங்களிலே அதுவே வருகிறது. விளக்கக் குறிப்பிலேயும் அதுவே வருகிறது. இது சரியானதுதானா? ஏனென்றால், ஆங்கிலத்தில் படித்தால் வேறுவிதமாக இருக்கிறது.

"Provided further that the above proviso shall not apply to the industries in pipe-line, referred to in G.O.Ms.No.12, Commercial Taxes Department, dated the 23rd January, 2000."

2002 மே 7] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஆக, இது குழாய் இணைப்பு தொடர் தொழில் என்று சொன்னால், குழாய்த் தொழிலுக்கு மட்டும்தான் பொருந்துமா? இல்லை, வேறு தொழில்களுக்கும் பொருந்துமா; நடைமுறையிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாவற்றிற்கும் பொருந்துமா என்பது தெளிவாக இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் சம்பந்தப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இது என் ஆய்வில் இருக்கிறது. நாளை இதுகுறித்துப் பேசி முடிவு செய்யலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது மிகவும் முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள், இதற்கு விளக்கம் ஏதேனும் இருக்கிறதா? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்ன என்று விசாரித்துச் சொல்வார்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விழுப்புரம் சட்டமன்றப் பேரவை உறுப்பினரது சட்டமன்ற அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திருவாளர்கள் ஐ. கணேசன், ப. ரங்கநாதன், ஜி.கே. மணி, டாக்டர் க. பொன்முடி, இ. புகழேந்தி மற்றும் எ.வ. வேலு ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு திரு. பொன்முடி அவர்களை அழைக்கிறேன். (குறுக்கீடு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்